**செய்தி வெளியீடு எண்: 850** **நாள்: 29.11.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (29.11.2019) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்படும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரகத்திற்கு 32 உதவி பொறியாளர் (தொழில்கள்) மற்றும் 2 முதுநிலை வேதியியலாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

தொழில் வணிக ஆணையரகம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், ஒருங்கிணைந்த தலைமையகமாக விளங்குகிறது. தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்ட தொழில் மையங்கள், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்ட தொழில் மையங்கள், மாவட்ட அளவில் தொழில் துவங்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு உகந்த தொழில்களைக் கண்டறிதல், தொழில் திட்ட அறிக்கையினைத் தயாரித்தல், பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிகளை பெற்றுத் தருதல், தொழில் துவங்க அரசின் பல்வேறு துறை சார்ந்த ஒப்புதல்களைப் பெற்று அளித்தல், அரசு மானியங்கள் மற்றும் ஊக்குவிப்பு தொகைகளை வழங்குதல் உள்ளிட்ட பணிகளைச் செய்து வருகின்றன.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரகத்தின் பணிகள் தொய்வின்றி நடைபெற, காலியாகவுள்ள 32 உதவிப் பொறியாளர் (தொழில்கள்) மற்றும் 2 முதுநிலை வேதியியலாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., குறு, சிறு மற்றும்

நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ராஜேந்திர குமார், இ.ஆ.ப., தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி அனு ஜார்ஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 29.11.2019**